- ✦ மேற்கூறிய இரு காரணிகளால் உயரம் அதிகரிக்கும் போது வெப்பநிலை குறைகிறது.

**வெப்ப தலைகீழ் மாற்றம் (Inversion of Temperature)**

- ✦ உயரம் அதிகரிப்பதற்கு ஏற்ப வெப்பநிலை அதிகரிப்பது **'வெப்ப தலைகீழ் மாற்றம்'** எனப்படுகிறது. இந்நிலையில் குளிர்காற்றின் மீது வெப்பக்காற்று காணப்படுகிறது.

**வெப்ப தலைகீழ் மாற்றத்திற்கான காரணிகள் :**

**1. நீண்ட குளிரான இரவுகள்**

- ✦ பகலில் புவியானது சூரியக் கதிர்வீச்சை உட்கிரகித்து இரவில் வெளிவிடுகிறது.
- ✦ வளிமண்டலத்தின் அடிப்பகுதி நிலப்பகுதியுடன் இணைந்து இருக்கிறது. எனவே நீண்ட இரவு நாட்களில் வளிமண்டலத்தின் கீழ்ப்பகுதி குளிர்ந்தும் மேற்பகுதி வெப்பமாகவும் காணப்படுகின்றன.

**2. தெளிவான வானம்**

- ✦ வானம் தெளிவாக இருக்கும்போது அதிகளவு புவிக்கதிர்வீசல், அதிகளவு உயரத்திற்கு சென்று விடுவதால், இப்பகுதியில் குறைவான வெப்பநிலையே காணப்படுகிறது.

**3. வறண்ட காற்று**

- ✦ இது புவிக்கதிர்வீசலை குறைவாக உட்கிரகித்து விண்வெளியை நோக்கி வெளியேற்றுகிறது.

**4. பனி மூடிய நிலப்பகுதி**

- ✦ குறைந்த அளவு புவிக் கதிர்வீசல் மற்றும் அதிகளவு **ஒளி திருப்புத்திறன்** (Albedo) காரணமாக இரவில் வளிமண்டலத்தில் அதிக வெப்ப இழப்பு ஏற்படுவதால் புவியின் மேற்பரப்பு குளிர்ச்சியடைகிறது.

**5. வளிமுகம் உருவாக்கம்**

- ✦ பல்வேறு வளிமுகங்கள் உருவாகும்போது குளிர்காற்றின் மீது வெப்பக்காற்று அமைவதால் வெப்ப தலைகீழ் மாற்றம் ஏற்படுகிறது.

**6. மலைக்காற்று**

- ✦ அதிகாலையில் குளிர்ந்த காற்று மலையுச்சியிலிருந்து கீழ்ப்பகுதியை நோக்கிச் செல்கிறது. இதனால் பள்ளத்தாக்கிலுள்ள வெப்பக்காற்று மேல்நோக்கி வெளியேறுகிறது. இது **'பள்ளத்தாக்கு வெப்ப தலைகீழ் மாற்றம்'** எனப்படுகிறது.

**வெப்பநிலை அளவீடுகள்**

| வெப்பநிலை அளவு | கண்டுபிடித்தவர் | ஆண்டு |
|---|---|---|
| பாரன்ஹீட் | கேப்ரியல் பாரன்ஹீட் | 1714 |
| செல்சியஸ் | ஆண்ட்ரூ செல்சியஸ் | 1742 |
| கெல்வின் | லார்ட் கெல்வின் | 1848 |

- ✦ புவி பெறக்கூடிய சூரியக் கதிர்களின் அளவைப் பொருத்து வெப்பநிலை மண்டலங்கள் உலகளவில் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.






of 23.
customer.support@surabooks.com Ph: 7871802000
Send Your Material &Question Answer Our Email ID -kalviexpress@gmail.com

this is only for sample guide for Full Book Order Online or
Available in All Leading Bookstores in your Town/City
www.kalviexpress.in www.kalviexpress.in



| வெப்ப மண்டலம் (Torrid zone) | மிதவெப்ப மண்டலம் (Temperate zone) | துருவ மண்டலம் (Polar zone) |
|---|---|---|
| 0° முதல் 23 1/2° வடக்கு மற்றும் தெற்கு வரை அமைந்துள்ளது. | 23 1/2° வடக்கு முதல் 66 1/2° வடக்கு மற்றும் 23 1/2° தெற்கு முதல் 66 1/2° தெற்கு வரை அமைந்துள்ளது. | 66 1/2° வடக்கு முதல் 90° வடக்கு மற்றும் 66 1/2° தெற்கு முதல் 90° தெற்கு வரை அமைந்துள்ளது. |
| கடக ரேகைக்கும் மகரரேகைக்கும் இடையிலான இந்தப் பகுதி வெப்பமண்டல பகுதி எனப்படுகிறது. | வட அரைக்கோளத்தில் கடகரேகைக்கும் ஆர்டிக் வட்டத்திற்கு இடையிலும் தென் அரைக் கோளத்தில் மகரரேகைக்கும் அண்டார்டிக் வட்டத்திற்கு இடையிலும் அமைந்துள்ள இப்பகுதிகள் மிதவெப்ப மண்டலப் பகுதி எனப்படுகிறது. | வடகோளத்தில் ஆர்டிக் வட்டத்திற்கும் வட துருவத்திற்கு இடையிலும், தென் கோளத்தில் அண்டார்டிக் வட்டத்திற்கும் தென் துருவத்திற்கும் இடையிலும் அமைந்துள்ள இப்பகுதிகள் துருவ மண்டலப் பகுதிகள் எனப்படுகின்றன. |
| இப்பகுதியில் சூரியக் கதிர்கள் செங்குத்தாக விழுகின்றன. | இப்பகுதியில் சூரியக் கதிர்கள் எப்போதும் செங்குத்தாக விழுவதில்லை. | இப்பகுதியில் எப்போதும் சூரியக் கதிர்கள் சாய்வாக விழுகின்றன. |
| மற்ற இரண்டு மண்டலங்களை விட வெப்பநிலை எப்போதும் அதிகமாக இருக்கும். | **கோடைகாலம் :** நீண்ட பகல், குறுகிய இரவு காணப்படும். **குளிர்காலம் :** நீண்ட இரவு, குறுகிய பகல் காணப்படும். | அதிகபட்ச கோடை காலத்தில் 24 மணி நேரமும் பகல் காணப்படும். அதிகபட்ச குளிர் காலத்தில் 24 மணி நேரமும் இரவு காணப்படும். |

### வெப்பநிலையின் வகைகள்

| | |
|---|---|
| ஆண்டு வெப்பநிலை (Annual Temperature) | ஒரு பகுதியின், ஒரு வருடத்தின் சராசரி வெப்பநிலை |
| ஆண்டு சராசரி வெப்பநிலை (Mean Annual Temperature) | ஒரு பகுதியின், 30 ஆண்டுகால வெப்பநிலையின் சராசரி |
| வெப்பநிலையின் வீச்சு (Range of Temperature) | ஒரு பகுதியின், அதிகபட்ச வெப்பநிலைக்கும் குறைந்தபட்ச வெப்பநிலைக்கும் இடையே உள்ள வேறுபாடு |
| ஆண்டு வெப்பநிலை வீச்சு (Annual Range of Temperature) | ஒரு பகுதியின், ஒரு வருடத்தின் அதிகபட்ச வெப்பநிலைக்கும் குறைந்தபட்ச வெப்பநிலைக்கும் இடையே உள்ள வேறுபாடு |
| தினசரி வெப்பநிலை வீச்சு (Diurnal Range of Temperature) | ஒரு பகுதியின், ஒரு நாளின் அதிகபட்ச வெப்பநிலைக்கும் குறைந்தபட்ச வெப்பநிலைக்கும் இடையே உள்ள வேறுபாடு |

### பசுமை இல்ல விளைவு (Green House Effect)

✦ வெப்பச் சமநிலையின் படி, நீண்ட அலைநீளம் உடைய கதிர்களை வளிமண்டலத்திலுள்ள பசுமை இல்ல வாயுக்கள் உட்கிரகிப்பதால் வளிமண்டலத்தின் வெப்பநிலை அதிகரிக்கிறது.

✦ இவ்வாயுக்கள் வெப்பத்தைத் தக்க வைத்துக் கொள்வதால், வெப்பம் வளிமண்டலத்தை விட்டு வெளியேறாமல் தடுக்கப்படுகிறது. இந்நிகழ்வு 'பசுமை இல்ல விளைவு' எனப்படுகிறது.

### உலக வெப்பமயமாதல் (Global Warming)

✦ கார்பன்–டை–ஆக்ஸைடு, நீராவி, மீத்தேன் மற்றும் ஓசோன் போன்ற பசுமை இல்ல வாயுக்களின் காரணமாக ஒவ்வோர் ஆண்டும் வெப்பநிலை அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

✦ உயிர் எரிபொருள் பயன்பாடு, வாகனங்கள், தொழிற்சாலை மற்றும் வீடுகளிலிருந்து வெளியேறும் கார்பன் வாயுக்களால் பசுமை இல்ல வாயுக்கள் உற்பத்தியாகிறது.

### நகர வெப்பத்தீவு (Urban Heat Island – UHI)

✦ வானுயர்ந்த கட்டடங்கள், சாலைகள், குறைவான தாவரப்பரவல், குறைவான மண்பரப்பு போன்றவற்றால் நகரப்பகுதியானது, கிராமப் பகுதியை விட அதிக வெப்பத்துடன் காணப்படுகிறது. எனவே இது **'நகர வெப்பத்தீவு'** எனப்படுகிறது.

### அல்பிடோ (Albedo)

✦ சூரியக்கதிர்வீச்சு புவியை வெப்பமடையச் செய்யாமல் உடனே மீண்டும் பிரதிபலித்தால், அந்நிகழ்வு **'அல்பிடோ'** அல்லது **'எதிரொலித்திறன்'** என்று அழைக்கப்படுகிறது. காடுகளை விட பனி அதிகளவு ஒளி திருப்புத்திறனைக் கொண்டுள்ளது.

### புவியின் வெப்பத்திட்டம் (Heat Budget)

✦ சூரியக்கதிர்வீச்சுக்கும் புவிக்கதிர்வீச்சுக்கும் இடையில் நிலவும் சமநிலைத் தன்மையைக் குறிக்கிறது.

### சமவெப்பக்கோடு (Isotherms)

✦ சமவெப்பநிலை உள்ள இடங்களை இணைக்க வரைபடத்தில் வரையப்படும் கற்பனைக் கோடு **'சமவெப்பக் கோடு'** ஆகும். புவி மேற்பரப்பின் சராசரி வெப்பநிலை 13° செல்சியஸ் ஆகும்.

### சம அளவு கோடுகள்

நில வரைபடங்களில் வானிலைக் கூறுகளின் பரவலானது சம அளவு கோட்டு வரைபடம் மூலம் குறிக்கப்படுகிறது. சம அளவுக் கோடு என்பது சம அளவுள்ள இடங்களை இணைப்பதாகும்.

| | |
|---|---|
| ஐசோதெர்ம் (Isotherm) | சம வெப்பக்கோடு |
| ஐசோக்ரைம் (Isocryme) | சராசரி சமவெப்பநிலைக் கோடு |
| ஐசோஹெல் (Isohel) | சம சூரிய வெளிச்சக் கோடு |
| ஐசோல்லோபார் (Isollobar) | சம காற்றழுத்த மாறுபாட்டுக் கோடு |
| ஐசோபார் (Isobar) | சம காற்றழுத்தக் கோடு |
| ஐசோஹைட்ஸ் (Isohyet) | சம மழையளவுக் கோடு |

### வெப்பநிலை வீச்சு (Mean Temperature)

ஓர் இடத்தில் 24 மணி நேரத்திற்குள் நிலவும் அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலைகளுக்கு இடையேயுள்ள சராசரியே வெப்பநிலை வீச்சு ஆகும்.

(எ.கா) அதிகபட்ச வெப்பநிலை = 87°F

குறைந்தபட்ச வெப்பநிலை = 73°F

$$\therefore \text{வெப்பநிலை வீச்சு} = \frac{87°F + 73°F}{2} = \frac{160°F}{2} = 80°F$$

### தினசரி வெப்பநிலை வீச்சு

ஒருநாளில் அமையும் உச்ச வெப்பநிலைக்கும் குறைந்த வெப்பநிலைக்கும் இடையேயுள்ள வேறுபாடு ஆகும். இது **தின வெப்பவியாப்தி** என அழைக்கப்படுகிறது.

### ஆண்டு வெப்ப வியாப்தி

ஓர் ஆண்டில் அதிகமான வெப்பம் இருந்த மாதத்தின் சராசரி வெப்பநிலைக்கும் குறைவாக வெப்பம் இருந்த மாதத்தின் சராசரி வெப்பநிலைக்கும் இடையேயுள்ள வேறுபாடு ஆகும்.

வெப்பநிலை பரவலை **சமவெப்பக் கோடுகள்** மூலம் காணலாம்.



of 23.
customer.support@surabooks.com Ph: 7871802000
Send Your Material &Question Answer Our Email ID -kalviexpress@gmail.com

this is only for sample guide for Full Book Order Online or
Available in All Leading Bookstores in your Town/City

www.kalviexpress.in www.kalviexpress.in



**(ii) வளிமண்டல அழுத்தம் (Atmospheric Pressure)**

✦ குறிப்பிட்ட பரப்பளவில் வாயுக்களின் எடை ஏற்படுத்தும் தாக்கமே **வளிமண்டல அழுத்தம்** எனப்படுகிறது.

✦ அளவை – பாதரச காற்றழுத்தமானி

✦ அலகு – மில்லிபார்

**(a) வளிமண்டல அழுத்தத்தின் செங்குத்துப் பரவல்**

**(Vertical Distribution of Atmospheric Pressure)**

✧ உயரே செல்லச்செல்ல காற்றின் அழுத்தம் குறைகிறது. ஒவ்வொரு 300 மீட்டர் உயரத்திற்கும் 34 மில்லிபார் அளவு காற்றழுத்தம் குறைகிறது.

✧ உயரமான பகுதிகளில் காற்றின் மூலக்கூறுகள் சிதறியும், அதிக இடைவெளியுடனும் காணப்படுகிறது.

**(b) வளிமண்டல அழுத்தத்தின் கிடைமட்டப் பரவல்**

**(Horizontal Distribution of Atmospheric Pressure)**

✧ வளிமண்டலத்தில் காணப்படும் கிடைமட்டப்பரவல் நேரத்திற்கு நேரம், இடத்திற்கு இடம் வேறுபடுகிறது.

**இதற்கான காரணிகள்**

✧ காற்றின் வெப்பநிலை (Air Temperature)

✧ புவியின் சுழற்சி (Earth Rotation)

✧ வளி மண்டலத்திலுள்ள நீராவியின் அளவு (Presence of Water Vapour)

**காற்றழுத்த மண்டலங்களின் பிரிவுகள்**




✦ நிலநடுக்கோட்டு தாழ்வழுத்த மண்டலம் (The Equatorial Low Pressure Belt)

✦ துணை வெப்ப உயர் அழுத்த மண்டலம் (The Subtropical High Pressure Belt)

✦ துணை துருவ தாழ்வழுத்த மண்டலம் (The Sub Polar Low Pressure Belts)

✦ துருவ உயரழுத்த மண்டலம் (The Polar-High Pressure Belt)

**(a) நிலநடுக்கோட்டு தாழ்வழுத்த மண்டலம்**

✧ நிலநடுக்கோட்டிலிருந்து $5^{0}$ வட, தென் அட்சங்களுக்கு இடையே காணப்படுகிறது.

✧ சூரியனின் செங்குத்தான கதிர்கள் இப்பகுதிகளை வெப்பமடையச் செய்வதால் காற்று விரிவடைந்து மேல்நோக்கிச் செல்கிறது. இதனால் **தாழ்வழுத்தம்** உருவாகின்றது.

✧ இம்மண்டலம் **'அமைதி மண்டலம்'** அல்லது **டோல்டுராம்ஸ்** (Doldrums) எனவும் அழைக்கப் படுகிறது.

**(b) துணை வெப்ப உயர் அழுத்த மண்டலம்**

✧ வெப்ப மண்டலத்திலிருந்து 35° வடக்கு மற்றும் தெற்கு அட்சம் வரை காணப்படுகிறது.

✧ நிலநடுக்கோட்டுப் பகுதியின் அதிக வெப்பம் காரணமாக மேலெழுகின்ற காற்றானது குளிர்ச்சியடைவதால், அதன் எடை அதிகரித்து இம்மண்டலத்தில் கீழிறங்குகிறது.

✧ இம்மண்டலத்தில் உயர் அழுத்தம் உருவாகின்றது. இம்மண்டலம் **'குதிரை அட்சங்கள்'** என்றும் அழைக்கப்படுகிறது.

**(c) துணை துருவ தாழ்வழுத்த மண்டலம்**

✧ 45° வட அட்சம் முதல் 66½° ஆர்க்டிக் வட்டம் வரையிலும், 45° தென் அட்சம் முதல் 66½°அண்டார்டிக் வட்டம் வரையிலும் இம்மண்டலம் பரவியுள்ளது.

✧ புவியின் சுழற்சி காரணமாக இம்மண்டலத்திலிருந்து துணை வெப்ப உயரழுத்த மண்டலத்திற்கும், துருவ உயரழுத்த மண்டலத்திற்கும் காற்று பிரிந்து செல்கிறது. இதன் காரணமாக இங்கு குறைந்த அழுத்தம் உருவாகிறது.

> **ITCZ மற்றும் டால்ட்ரம்**
>
> ITCZ என்பது துணை வெப்ப உயர் அழுத்த மண்டலங்களிலிருந்து குவியும் காற்றுப் பகுதியானது, வெப்பமண்டல நிலநடுக்கோட்டுப் பகுதியிலிருந்து மேலெழும்பும் காற்றுகள் காணப்படும் பகுதியாகும். (ITCZ - The Inter Tropical Convergence Zone)
>
> **டால்ட்ரம்ஸ்** என்பது அமைதி, எதிர்பாராத காற்றுகள் மற்றும் திடீர் சூறாவளிகள் ஏற்படும் நிலநடுக்கோட்டுப் பகுதியாகும்.

**(d) துருவ உயரழுத்த மண்டலம்**

✧ இங்கு சூரியனின் கதிர்கள் மிகவும் சாய்வான கோணத்தில் விழுவதால் வெப்பம் குறைவாகக் காணப்படுகிறது.

✧ குறைவான வெப்பம் காரணமாகக் காற்று அதிக அடர்த்தியுடன் காணப்படும். எனவே இங்கு **அதிக காற்றழுத்தம்** நிலவுகிறது.

✧ இங்கிருந்து துணை துருவ தாழ்வழுத்த மண்டலத்தை நோக்கி காற்று வீசும்.

✧ புவி தன் அச்சில் சுழல்வதே அழுத்த வேறுபாடுகளுக்குக் காரணமாகும்.

> **குதிரை அட்சம்**
>
> பழங்கால வணிகர்கள் துணை வெப்ப உயரழுத்த மண்டலங்களில் பயணிக்கும் போது, காற்று கப்பலைச் செல்லவிடாமல் ஒரே இடத்தில் பல நாட்கள் நிலை கொள்ளச் செய்யும்.
>
> அப்போது கப்பலின் எடையைக் குறைக்க, கொண்டு செல்லப்பட்ட குதிரைகளை கடலில் தூக்கி எறியும் வழக்கம் இருந்தது. அதனால் இம்மண்டலம் **'குதிரை அட்சம்'** எனப்படுகிறது.

**வளிமண்டல அழுத்தம் மற்றும் காற்றுகள்**

✦ வளிமண்டல அழுத்தம் என்பது புவியின் மேற்பரப்புக்கு மேலே ஓர் அலகு பரப்பிலுள்ள காற்று மூலக்கூறுகளின் எடை ஆகும்.

✦ காற்றின் எடை அதிகரிக்கும்போது அழுத்தப் புள்ளியின் மதிப்பும் அதிகரிக்கிறது.

✦ காற்றின் வெப்பநிலை அதிகரிக்கும்போது காற்றின் அழுத்தம் குறைகிறது. வெப்பநிலை குறையும்போது காற்றின் அழுத்தம் அதிகரிக்கிறது.

✦ எனவே வெப்பநிலையும் வளிமண்டல அழுத்தமும் எதிர்மறையான தொடர்புடையது.

✦ வளிமண்டல அழுத்தம், **அழுத்தமானி** (Barometer) என்ற கருவியால் அளக்கப்படுகிறது.

**வளிமண்டல அழுத்தத்தின் செங்குத்து பரவல்**

✦ வளிமண்டலத்தின் மேல்பகுதி, அடர்த்தி குறைந்து மெலிதாகக் காணப்படுகிறது. அழுத்தம் அளவிடப்படும் குறிப்பிட்ட புள்ளிக்கு மேல் காணப்படும் பருப்பொருள்களின் அளவு படிப்படியாகக் குறைவதால் கடல் மட்ட உயரத்திலிருந்து மேலே செல்லச்செல்ல அழுத்தமானது தொடர்ந்து குறைகிறது.



of 23.
customer.support@surabooks.com Ph: 7871802000
Send Your Material &Question Answer Our Email ID -kalviexpress@gmail.com

this is only for sample guide for Full Book Order Online or
Available in All Leading Bookstores in your Town/City
www.kalviexpress.in www.kalviexpress.in


| கடல் மட்டத்திலிருந்து உயரம் (மீட்டர்) | வளிமண்டல அழுத்தம் (மில்லிபார் – mb) |
|---|---|
| கடல்மட்ட உயரம் | 1013.25 |
| 1000 | 898.76 |
| 2000 | 795.01 |
| 3000 | 701.01 |
| 4000 | 616.60 |
| 5000 | 540.48 |
| 10000 | 264.0 |

**சம அழுத்தக் கோடு** (Isobar)

சராசரி கடல்மட்ட உயரத்தில் உள்ள சம அழுத்தப் பகுதிகளை இணைக்கும் கற்பனைக் கோடு 'சம அழுத்தக் கோடு' எனப்படுகிறது.

**கோரியாலிஸ் விளைவு :** (Coriolis Effect)

✦ புவியின் சுழற்சியானது, புவியின் மேற்பரப்பில் நகரும் பொருள்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதனால் பொருள்கள் நேர்கோட்டில் பயணிப்பது இல்லை.

✦ அவை வடகோளத்தில் வலப்புறமாகவும், தென் கோளத்தில் இடப்புறமாகவும் நகரும்.

✦ வடகோளத்தில் மணிக்கு 95 கி.மீ வேகத்தில் நேர்கோட்டில் செல்லும் ஒரு வாகனத்தின் சக்கரத்திற்கும் புவித்தரைக்கும் இடையே உராய்வு இல்லையென்றால் வலப்புறமாகத் திரும்பும். இவ்விளைவு **கோரியாலிஸ் விளைவு** எனப்படுகிறது.

✦ இவ்விளைவைக் கண்டறிந்தவர் **G.G. கோரியாலிஸ்.**

✦ கோரியாலிஸ் விளைவின் காரணமாக செயற்கைக் கோளை ஏவும் தளங்கள் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

(எ.கா) ஸ்ரீஹரிகோட்டா – இந்தியா
பிரெஞ்ச் கயானா – பிரான்ஸ்

**வளிமண்டல அழுத்தத்தின் கிடைமட்ட பரவல்**

✦ காற்று வெப்பமடையும் போது விரிவடைந்து செங்குத்தாக மேலே உயர்வதால் காற்றின் அழுத்தம் குறைந்து **தாழ்வழுத்தப் பகுதி** உருவாகிறது.

✦ குளிர்ந்த காற்றின் அடர்த்தி அதிகமாகி செங்குத்தாக கீழிறங்குவதால் தரைப்பகுதியில் காற்றின் எடை மற்றும் அழுத்தம் அதிகரித்து **உயர் அழுத்தப் பகுதி** உருவாகிறது.

**புவி அழுத்தப்பட்டைகள் மற்றும் காற்றுகள் (Pressure Belts of the Earth and Winds)**

1. நிலநடுக்கோட்டு தாழ்வழுத்தப்பட்டை
2. துணை வெப்ப மண்டல உயர் அழுத்தப்பட்டை
3. துணை துருவ தாழ்வழுத்தப்பட்டை
4. துருவ உயர் அழுத்தப்பட்டை




**காற்றின் வகைகள்**

- **புவிமேற்பரப்புக் காற்று**
  - **முதன்மைக் காற்று (உலகளாவிய காற்றுகள் (அ) கோள் காற்றுகள் (அ) நிலையான காற்றுகள்)**
    1. வியாபாரக் காற்றுகள்
    2. மேற்கத்திய காற்றுகள்
    3. துருவ கிழக்கத்திய காற்றுகள்
  - **இரண்டாம் நிலை காற்றுகள் (பருவக்காற்றுகள் (அ) வட்டாரக் காற்றுகள்)**
    1. பருவக் காற்றுகள்
    2. சூறாவளி
  - **மூன்றாம் நிலை காற்றுகள் (அ) தலக்காற்றுகள்**
    1. கடல் மற்றும் நிலக்காற்றுகள்
    2. மலை மற்றும் பள்ளத்தாக்கு காற்றுகள்
    3. குளிர் மற்றும் வெப்பக் காற்றுகள்
- **உயர் அட்சரேகைக் காற்று**
  - **ஜெட் காற்று**

**4. காற்று** (Wind)

✦ வளிமண்டல சமநிலையை நிலைநிறுத்துவதற்காக உயர் அழுத்தம் உள்ள பகுதிகளில் இருந்து தாழ்வழுத்தம் உள்ள பகுதியை நோக்கி வாயு மூலக்கூறுகள் கிடைமட்டமாக நகர்வது 'காற்று' எனப்படுகிறது.

✦ காற்றானது எப்போதும் சமஅழுத்தக் கோட்டில் நகர்கிறது. புவி சுற்றவில்லை எனில் காற்று நேர்க்கோட்டில் சென்றுவிடும்.

**காற்றழுத்தம்** (Air Pressure)

புவியின் மேற்பரப்பில் குறிப்பிட்ட பகுதியிலுள்ள காற்றின் எடையே வளிமண்டல அழுத்தம் (அ) காற்றழுத்தம் எனப்படுகிறது.


customer.support@surabooks.com Ph: 7871802000
Send Your Material &Question Answer Our Email ID -kalviexpress@gmail.com

this is only for sample guide for Full Book Order Online or
Available in All Leading Bookstores in your Town/City

www.kalviexpress.in www.kalviexpress.in



கடல் மட்டத்தில் உள்ள நிலையான காற்றழுத்தத்தின் அளவு 1013.25 மில்லிபார் ஆகும். பூமியிலுள்ள அனைத்துப் பகுதிகளிலும் காற்றழுத்தத்தின் அளவு **1.03 கிலோ / ச.செ.மீ.** ஆகும்.

நிலையான வளிமண்டல அழுத்த வேறுபாட்டினால் காற்றழுத்தம் கிடையாகவும் செங்குத்தாகவும் காணப்படுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு குறைந்த காற்றழுத்த மண்டலம் அதிக காற்றழுத்த மண்டலம் எனப் பிரிக்கப்படுகிறது.

| குறைந்த காற்றழுத்த மண்டலம் | அதிக காற்றழுத்த மண்டலம் |
|---|---|
| சுற்றியுள்ள பகுதிகளை விட வளிமண்டலத்தில் அழுத்தம் குறைவாக இருக்கும். | சுற்றியுள்ள பகுதிகளை விட வளிமண்டலத்தில் அழுத்தம் அதிகமாக இருக்கும். |
| அழுத்தம் அதிகமுள்ள பகுதியிலிருந்து இப்பகுதியை நோக்கி காற்று வீசும் | இப்பகுதியிலிருந்து அழுத்தம் குறைந்த பகுதியை நோக்கி காற்று வீசும். |
| இந்த மண்டலம் 'L' என்ற எழுத்தால் குறிக்கப்படுகிறது. | இந்த மண்டலம் 'H' என்ற எழுத்தால் குறிக்கப்படுகிறது. |
| இம்மண்டலம், 'காற்றழுத்த தாழ்வு மண்டலம்' எனவும் 'சூறாவளி' எனவும் அழைக்கப்படுகிறது. | இம்மண்டலம் 'எதிர் சூறாவளி காற்றுகள்' என அழைக்கப்படுகிறது. |
| இம்மண்டலம் மேக மூட்டத்தையும், காற்றையும், மழைப்பொழிவையும் உருவாக்குகிறது. | அமைதியான வானிலையைத் தருகிறது. |

சம அளவுள்ள காற்றழுத்தத்தின் பரவலை காண சம அழுத்தக் கோடு (ஐசோபார்) பயன்படுகிறது.

வளிமண்டல அழுத்தத்தை உயரம், வளிமண்டல வெப்பநிலை, காற்று சுழற்சி, பூமியின் தன்சுழற்சி, நீராவி மற்றும் வளிமண்டலப் புயல்கள் ஆகிய காரணிகள் தீர்மானிக்கின்றன.

**அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றழுத்தம் பதிவான இடங்கள்**

| அதிகபட்ச காற்றழுத்தம் | குறைந்தபட்ச காற்றழுத்தம் |
|---|---|
| உலகில் இதுவரை பதிவான மிக அதிகபட்ச காற்றழுத்தம் 1083.8 மில்லிபார் (mb) | உலகில் இதுவரை பதிவான மிகக் குறைந்தபட்ச காற்றழுத்தம் 870 மில்லிபார் (mb) |
| 1968–ஆம் ஆண்டு டிசம்பர் 31–ஆம் தேதி ரஷ்யாவில் உள்ள 'அகாட்' என்ற இடத்தில் கடல் மட்டத்தில் பதிவானது. | 1979–ஆம் ஆண்டு அக்டோபர் 12–ஆம் தேதி பசிபிக் பெருங்கடலில் உள்ள மரியானா தீவிற்கு அருகில் உள்ள 'குவாம்' என்ற கடல் பகுதியில் உருவான டைபூனின் கண் பகுதியில் பதிவானது. |

நாம் விமானத்தில் செல்லும் போது நமது காதுகள் அடைத்துக் கொள்கின்றன. ஏனெனில் நாம் உயரே செல்லும் போது வளிமண்டலத்தில் உள்ள அழுத்தமானது, நம்முடைய காதுகளில் உள்ள அழுத்தத்தை விட குறைவாக உள்ளது. எனவே காதுகள் இவ்விரண்டையும் சமப்படுத்தும் போது அடைத்துக் கொள்கின்றன. இந்நிகழ்வு விமானத்திலிருந்து கீழே இறங்கும் போதும் நிகழ்கிறது.

**காற்றோட்டம் (Air Current)**

✦ வளிமண்டலத்தில் காற்று செங்குத்தாக அசையும் நிகழ்வே இவ்வாறு அழைக்கப்படுகிறது.

**காற்று வீசும் திசை**

✦ காற்று எப்பொழுதும் உயர் அழுத்தப் பகுதியிலிருந்து தாழ்வழுத்தப் பகுதியை நோக்கி வீசும். காற்று வீசும் திசையைப் பொருத்தே அதன் பெயரும் அமைகிறது.

(எ.கா) கிழக்குத் திசையிலிருந்து வீசும் காற்று **'கீழைக்காற்று'** எனப்படுகிறது.

கடல் மட்டத்தில் காணப்படும் காற்றழுத்தத்தின் 1/3 பாகமே **எவரெஸ்ட் சிகரத்தில்** காணப்படுகிறது.

விமானத்திலோ, மலைப்பிரதேச சாலைகளிலோ பயணிக்கும் போது காதுகள் அடைப்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது. காற்றழுத்தத்திற்கு ஏற்றவாறு காதுகள் தானே சரிசெய்து கொள்வதே இதற்குக் காரணமாகும்.

**பியோபோர்டு கருவி**

இது காற்றின் வேகத்தை அளவிட பயன்படுகிறது. 1805–ஆம் ஆண்டு இராயல் கப்பற்படை அதிகாரியான **பிரான்சிஸ் பியோபோர்டு** என்பவரால் இக்கருவி உருவாக்கப்பட்டது. இக்கருவி முதன்முதலில் எச்.எம்.எஸ். பீகலில் அதிகாரப்பூர்வமாக பயன்படுத்தப்பட்டது.

**காற்று வேகமானி :** (Anemometer)

✦ இது காற்றின் வேகத்தை அளக்க உதவும் கருவி.

✦ **விண்ட்ரோஸ் :** காற்றின் திசையையும் வீசும் காலத்தையும் குறிக்கும் ஒரு நில வரைபடமாகும்.

**மீட்டிரோ கிராம் (அ) டிரிபில் ரிஜிஸ்டர்**

இது காற்றின் திசை, வேகம், சூரிய வெளிச்சம், மழை ஆகிய வானிலைக் கூறுகளை வரைகோட்டுப் படத்தின் மூலம் பதிவு செய்யும் கருவியாகும்.

பிரேசிலின் பெரும்பகுதியில் காற்றின் வேகம் குறைவாக உள்ளது.

ஆப்பிரிக்காவின் காபான், காங்கோ மற்றும் DR காங்கோ ஆகியவை காற்று குறைவாக வீசும் பகுதிகளாகும்.

சுமத்ரா, இந்தோனேசியா, மலேசியா ஆகியவை காற்று குறைவாக வீசும் பகுதிகளாகும்.

**பொதுவான வளிமண்டல சுழற்சி, அழுத்தப்பட்டைகள் மற்றும் முதன்மைக் காற்றுகள்**

✦ நிலநடுக்கோட்டிலிருந்து துருவங்கள் வரை ஒவ்வொரு கோளத்திலும் 4 அழுத்தப்பட்டைகளும், உலக அளவில் மொத்தம் 7 அழுத்தப்பட்டைகளும் காணப்படுகின்றன.

**நிலநடுக்கோட்டு தாழ்வழுத்தப் பட்டை – 5° வடக்கு மற்றும் 5° தெற்கு : (The Equatorial Low Pressure Belt)**

✦ இது அமைதியான, பலவீனமான மற்றும் மாறுபடும் காற்று நிலவும் பகுதி என்பதால், அமைதி மண்டலம் (Doldrums) எனப்படுகிறது.

✦ இப்பகுதியில் அதிக வெப்பநிலை நிலவுவதால் காற்று சூடாகி விரிவடைந்து மேல்நோக்கிச் செல்கிறது. இதனால் அழுத்தம் குறைந்து தாழ்வழுத்தப் பகுதி உருவாகிறது.

✦ துணை வெப்பமண்டல உயர் அழுத்தப் பகுதியிலிருந்து நிலநடுக்கோட்டு தாழ்வழுத்தப் பகுதியை நோக்கி காற்று வீசுகிறது.

✦ கோரியாலிஸ் விளைவு காரணமாக இக்காற்றுகள் வட அரைக்கோளத்தில் வலதுபுறமாகவும் தென் அரைக்கோளத்தில் இடது புறமாகவும் திசை திருப்பப்படுகிறது.

✦ திசை திருப்பப்படும் பகுதியைப் பொருத்து வடகிழக்கு மற்றும் தென்கிழக்கு வியாபாரக் காற்றுகள் எனப் பெயரிடப்படுகின்றன.

**துணை வெப்பமண்டல உயர் அழுத்தப்பட்டை – 25° முதல் 35° வரை வடக்கு மற்றும் தெற்கு : (The Sub Tropical High Pressure Belt)**

✦ நிலநடுக்கோட்டுப் பகுதியிலிருந்து துருவங்களை நோக்கி செல்லும் குளிர்ந்த காற்றானது, துருவ மண்டலத்திலிருந்து வரும் காற்றோடு மோதி, துணை வெப்பமண்டல நிலப்பரப்பை நோக்கி கீழிறங்குகிறது. இதனால் துணை வெப்பமண்டலப் பகுதியில் உயர் அழுத்தப் பட்டைகள் உருவாகின்றன.



of 23.

customer.support@surabooks.com Ph: 7871802000
Send Your Material &Question Answer Our Email ID -kalviexpress@gmail.com

this is only for sample guide for Full Book Order Online or
Available in All Leading Bookstores in your Town/City
www.kalviexpress.in www.kalviexpress.in



- ✦ கீழிறங்கும் காற்றானது இரு பிரிவுகளாகப் பிரிகின்றது.
  1. **வியாபாரக் காற்று :** (Trade Winds) இது நிலநடுக்கோட்டை நோக்கி வீசுகிறது.
  2. **மேற்கத்திய காற்று :** (Westerly Winds) இது துணை துருவத்தை நோக்கி வீசுகிறது. இக்காற்று துணை வெப்பமண்டலத்திலிருந்து துருவத்தை நோக்கி நகரும்போது, வடகோளத்தில் வலது புறமாகவும், தென் கோளத்தில் இடது புறமாகவும் திரும்புகிறது.

**குதிரை அட்சரேகை (Horse Latitude)**

- ✦ இப்பகுதியில் அதிக அழுத்தம் நிலவுவதால், கப்பல்களின் வேகம் குறைவதைத் தடுக்க, கப்பல்களிலிருந்த குதிரைகள் கடலில் தூக்கி எறியப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்நிகழ்வினால் துணை வெப்ப மண்டலம் 'குதிரை அட்ச ரேகை' எனவும் அழைக்கப்படுகிறது.

**துணை துருவ தாழ்வழுத்தப் பட்டைகள் – 50° முதல் 60° வரை வடக்கு மற்றும் தெற்கு (The Sub Polar Low Pressure Belt)**

- ✦ துணை வெப்பமண்டலத்திலிருந்து துருவத்தை நோக்கி வீசும் வெப்பமான மேற்கத்திய காற்றும் துருவ உயர் அழுத்தப் பகுதியிலிருந்து வீசும் குளிர்ந்த கிழக்கத்திய காற்றும் மோதிக்கொண்டு உயரே எழும்புவதால் துணை துருவ தாழ்வழுத்தப்பட்டைகள் உருவாகின்றன.

**துருவ உயர் அழுத்தப் பட்டைகள் – 80° வடக்கு மற்றும் 80° தெற்கு முதல் துருவம் வரை : (Polar High Pressure Belt)**

- ✦ சாய்வான சூரியக் கதிர்வீசல் காரணமாக இப்பகுதியில் எப்போதும் குறைந்த வெப்பநிலையே காணப்படுகிறது. இதனால் இரு துருவங்களிலும் துருவ உயர் அழுத்தப்பட்டைகள் உருவாகின்றன.

| உயர் அழுத்தம் | தாழ்வழுத்தம் |
|---|---|
| மேற்பரப்பில் இருக்கும் உயர் அழுத்தம் உயரமான பகுதிகளில் காணப்படும் தாழ்வழுத்தத்துடன் எப்போதும் ஒத்திருக்கிறது. | மேற்பரப்பில் இருக்கும் தாழ்வழுத்தம் உயரமான பகுதிகளில் காணப்படும் உயர் அழுத்தத்துடன் எப்போதும் ஒத்திருக்கிறது. |
| காற்று வளிப்பகுதி எப்போதும் மையத்திலிருந்து விலகுகிறது. | காற்று வளிப்பகுதி எப்போதும் மையத்தில் குவிகிறது. |

புவியின் தென்கோளத்தில் 40° தெற்கு முதல் 60° தெற்கு வரை பெருங்கடல் பரந்து விரிந்துள்ளது. இதனால் மேற்கத்திய காற்றுகள் தொடர்ந்து வலிமையானதாக இருக்கும்.

எனவே கப்பலோட்டிகளால் இப்பகுதியானது, **உறுமும் நாற்பது, சீறும் ஐம்பது, கீச்சிடும் அறுபது** என அழைக்கப்படுகிறது.

**அழுத்தப்பட்டைகள் உருவாவதற்கான அடிப்படைக் காரணிகள் :**

| வெப்பநிலை | இயக்க ஆற்றல் |
|---|---|
| நிலநடுக்கோட்டுப் பகுதியில் அதிக வெப்பத்தினால் தாழ்வழுத்தப் பட்டைகளும் துருவப் பகுதியில் குறைந்த வெப்பத்தினால் உயர் அழுத்தப்பட்டைகளும் உருவாகின்றன. | காற்றின் இயக்கம் மற்றும் மோதல் காரணமாக துணை வெப்பமண்டல உயர் அழுத்த மற்றும் துணை துருவ தாழ்வழுத்த பட்டைகள் உருவாகின்றன. |
| இந்த அழுத்தப்பட்டைகள் வெப்ப அழுத்தப் பட்டைகள் எனப்படுகின்றன. | இந்த அழுத்தப் பட்டைகள் இயக்க ஆற்றல் பட்டைகள் எனப்படுகின்றன. |

**நெடுவரை காற்று அறை (Meridional Cell System)**

| ஹாட்லே செல் (Hadley Cell) | பெரல் செல் (Ferrell's Cell) | துருவ செல் (Polar Cell) |
|---|---|---|
| வியாபாரக் காற்றானது, மேலெழும்பும் நிலநடுக்கோட்டு தாழ்வழுத்தப்பட்டை மற்றும் கீழிறங்கும் துணை வெப்ப மண்டல உயர் அழுத்தப்பட்டை ஆகிய இரண்டுடனும் இணைந்து அறைபோன்று காணப்படும் தோற்றம் ஆகும். | மேற்கத்தியக் காற்றானது, மேலெழும்பும் துணை துருவ தாழ்வழுத்தப்பட்டை மற்றும் கீழிறங்கும் துணை வெப்பமண்டல உயர் அழுத்தப்பட்டை ஆகிய இரண்டுடன் இணைந்து அறை போன்று காணப்படும் தோற்றம் ஆகும். | வட, தென் துருவ உயர் அழுத்தப்பட்டையில் இருந்து வரும் துருவ கிழக்கத்தியக் காற்று மற்றும் துணை துருவ தாழ்வழுத்தப்பட்டை ஆகிய இரண்டும் இணைந்த பகுதி ஆகும். |

**வெப்பமண்டல இணைப்புப் பகுதி (ITCZ – Inter Tropical Convergent Zone)**

- ✦ இரண்டு வியாபாரக் காற்று அமைப்புகள் சந்திக்கும் பகுதி வெப்பமண்டல இணைப்புப் பகுதி எனப்படுகிறது.

**அழுத்தப்பட்டைகள் மற்றும் முதன்மைக் காற்றுகளின் இடமாற்றம்**

- ✦ அழுத்த மண்டலங்களும் முதன்மைக் காற்றுகளும் மாறும் தன்மையைக் கொண்டுள்ளன. ஏனெனில் அவற்றின் நிலையிலிருந்து 5° வடக்கு மற்றும் 5° தெற்காக சூரியனின் நகர்வோடு அவை இணைந்து நகர்கின்றன.

**இரண்டாம் நிலை காற்றுகள்**

- ✦ பருவக்காற்று மற்றும் சூறாவளி ஆகிய இரண்டும் இரண்டாம் நிலை காற்றுகள் (வட்டாரக் காற்றுகள்) எனப்படுகின்றன.






of 23.
customer.support@surabooks.com Ph: 7871802000
Send Your Material &Question Answer Our Email ID -kalviexpress@gmail.com

this is only for sample guide for Full Book Order Online or
Available in All Leading Bookstores in your Town/City
www.kalviexpress.in www.kalviexpress.in


**பருவக்காற்று (Monsoon)**

✦ 'மாசிம்' (Mausim) என்ற **அரேபியச்** சொல்லில் இருந்து **மான்சூன்** (Monsoon) என்ற சொல் பெறப்பட்டது. இதன் பொருள் 'பருவங்கள்' என்பதாகும்.

✦ நிலம் மற்றும் நீர் பகுதிகள் வெப்பமடைதல் மற்றும் குளிர்ச்சியடைதலின் சமமற்ற தன்மைகளால் திசை திரும்பும் காற்றுகள் '**பருவக்காற்றுகள்**' எனப்படுகின்றன.

**பருவக்காற்று தோன்றும் முறைகள்**

| கோடைகாலம் | குளிர்காலம் |
|---|---|
| கோடைகாலத்தில் நிலப்பரப்பு அதிகமாக வெப்பமடைவதால் நிலப்பரப்பின் மீது தாழ்வழுத்தம் உருவாகிறது | குளிர்காலத்தில் நிலப்பரப்பு அதிகளவு வெப்பத்தை வெளியேற்றி விடுவதால், நிலப்பரப்பின் மீது உயர் அழுத்தம் உருவாகிறது. |
| பெருங்கடல் பகுதியில் குறைவான வெப்பநிலை நிலவுவதால் உயர் அழுத்தம் உருவாகிறது. | பெருங்கடல் பகுதியில் நிலப்பரப்பை விட அதிகளவு வெப்பநிலை நிலவுவதால் தாழ்வழுத்தம் உருவாகிறது. |
| கடலிலிருந்து நிலத்தை நோக்கி காற்று வீசுகிறது. | நிலத்திலிருந்து கடலை நோக்கி காற்று வீசுகிறது. |

**பருவக்காற்றின் இயல்புகள்**

✦ பருவக் காற்றானது மூன்று முக்கிய இயல்புகளினால் பிற காற்றுகளில் இருந்து முற்றிலும் வேறுபடுகிறது.
1. பருவங்களுக்கு இடையே காற்று வீசும் திசை குறைந்தபட்சம் 160° அளவு திரும்புதல்.
2. கண்டங்கள் மற்றும் பெருங்கடலில் பெரும் பகுதிகளில் தாக்கத்தை ஏற்படுத்துதல்.
3. நிலம் மற்றும் நீர்ப் பகுதிகளில் தோன்றும் உயர் மற்றும் தாழ் அழுத்த அமைப்புகள் பருவகாலத்திற்கு ஏற்ப இடம் மாறுதல்.

✦ மேற்குறிப்பிட்ட இயல்புகளில் ஏதாவது ஒரு இயல்பு இல்லாமல் இருந்தால் அக்காற்று **போலி பருவக்காற்று** (Pseudo Monsoon) எனப்படுகிறது. இது '**பொய் பருவக்காற்று**' என்றும் '**பருவக்காற்று மாதிரி**' (Monsoon Tendency) என்றும் அழைக்கப்படுகிறது.

**i. ஆசியப் பருவக்காற்று (Asian Monsoon)**

| ஆசியாவின் கோடைகால பருவக்காற்று | ஆசியாவின் குளிர்கால பருவக்காற்று |
|---|---|
| பைக்கால் ஏரிப்பகுதியில் நிலவும் அதிக வெப்பத்தால் தாழ் அழுத்தம் ஏற்படுகிறது. | பைக்கால் ஏரிப்பகுதியில் நிலவும் குறைந்த வெப்பத்தால் உயர் அழுத்தம் ஏற்படுகிறது. |
| பசிபிக் பெருங்கடலில் அல்லூசியன் தீவுப் பகுதியில் நிலவும் குறைந்த வெப்பத்தால் உயர் அழுத்தம் ஏற்படுகிறது. | பசிபிக் பெருங்கடலில் அல்லூசியன் தீவுப் பகுதியில் நிலவும் அதிக வெப்பத்தால் தாழ் அழுத்தம் ஏற்படுகிறது. |
| இதனால் பசிபிக் பெருங்கடலில் இருந்து ஆசியாவின் மையப் பகுதியை நோக்கி காற்று வீசுகிறது. இது 'ஆசியாவின் கோடைகால பருவக்காற்று' எனப்படுகிறது. | இதனால் ஆசியாவிலிருந்து பசிபிக் பெருங்கடலை நோக்கி காற்று வீசுகிறது. இது 'ஆசியாவின் குளிர்கால பருவக்காற்று' எனப்படுகிறது. |
| இக்காற்று ஆசியாவின் கிழக்குக் கடற்கரையோரத்தில் மழைப்பொழிவைக் கொடுக்கிறது. | இக்காற்று ஜப்பானின் மேற்குக் கடற்கரையைத் தவிர, ஆசியாக் கண்டத்திற்கு மழைப்பொழிவைக் கொடுப்பதில்லை. |

**ii. தெற்காசியப் பருவக்காற்று (South Asian Monsoon)**

✦ இக்காற்றானது இமயமலைக்குத் தெற்கிலுள்ள இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம், இலங்கை, மாலத்தீவு, நேபாளம் மற்றும் பூட்டான் ஆகிய நாடுகளில் வீசுகிறது. இது தென்மேற்குப் பருவக்காற்று, வடகிழக்குப் பருவக்காற்று என இருபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**தென்மேற்குப் பருவக்காற்று (South West Monsoon)**

✦ கோடைகாலத்தில் இந்தியத் தீபகற்பம், அதனைச் சுற்றியுள்ள கடல்பகுதியை விட அதிகமான வெப்பத்தைப் பெறுகிறது. இதனால் பாகிஸ்தானின் பெசாவர் பகுதியில் தாழ் அழுத்தம் உருவாகிறது.

✦ அதேசமயம் இந்தியப் பெருங்கடல் பகுதியில் நிலவும் குறைந்த வெப்பநிலை காரணமாக உயர் அழுத்தம் உருவாகிறது.

✦ எனவே இந்தியப் பெருங்கடலில் இருந்து தெற்காசியாவை நோக்கி **தென்கிழக்காக** காற்று வீசுகிறது. இந்தக்காற்று நிலநடுக்கோட்டைக் கடக்கும் போது **கோரியாலிஸ் விளைவு** காரணமாக வலதுபுறம் திரும்பி **தென்மேற்குப் பருவக்காற்றாக** மாறுகிறது.

✦ இக்காற்று ஆண்டுக்கு நான்கு மாதம் மிக அதிக மழைப்பொழிவைத் தருகிறது. இது அரபிக்கடல் கிளை மற்றும் வங்காள விரிகுடா கிளை என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது.

| அரபிக்கடல் கிளை | வங்காள விரிகுடா கிளை |
|---|---|
| இக்காற்று மேற்குத்தொடர்ச்சி மலையால் தடுக்கப்பட்டு மலைத்தடை மழையை உருவாக்குகிறது. | இக்காற்று இலங்கையில் மலைத்தடை மழையை உருவாக்குகிறது. |
| மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் அதிக மழையைக் கொடுக்கிறது. | அந்தமான் நிக்கோபார் தீவுகளில் அதிக மழையைக் கொடுக்கிறது. |
| இந்தியாவில் தென்மேற்குப் பருவக்காற்றால் மழையைப் பெறும் முதல் மாநிலம் **கேரளா** ஆகும். ஜூன் முதல் வாரத்தில் இருந்து மழையைப் பெறுகிறது. | இந்தியாவில் தென்மேற்குப் பருவக்காற்றால் மழையைப் பெறும் முதல் பகுதி கிரேட் நிக்கோபார் தீவில் உள்ள **இந்திராமுனை** ஆகும். மே மாதம் நடுவில் மழையைப் பெறுகிறது. |
| இக்காற்று படிப்படியாக நகர்ந்து கர்நாடகா, கோவா, மகாராஷ்டிரா, குஜராத், இராஜஸ்தான் ஆகிய பகுதிகளுக்கு மழையைக் கொடுக்கிறது. | இக்காற்று இந்தியாவின் கிழக்குக் கடற்கரைக்கு போதிய அளவு மழையைக் கொடுப்பதில்லை. |
| இக்காற்று இமயமலையில் மோதி இமயமலை, பஞ்சாப் மற்றும் ஹரியானா பகுதிகளுக்கு ஓரளவு மழையைக் கொடுக்கிறது. | இக்காற்று மியான்மரில் உள்ள அரக்கன்யோமா மலையின் மீது மோதி மியான்மரின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் அதிக மழையைக் கொடுக்கிறது. |
| அரபிக்கடல் கிளையின் ஒரு பகுதி கிழக்கு நோக்கி நகர்ந்து உத்திரப்பிரதேசம் மற்றும் பீஹாரில் மழையைக் கொடுக்கிறது. | இக்காற்று மியான்மரின் அரக்கன்யோமா மலையால் திருப்பப்பட்டு இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களை நோக்கி **'புனல்'** வடிவில் குவிக்கப்படுவதால் மேகாலயா, வங்காளதேசம், மற்றும் இந்தியாவின் வடகிழக்குப் பகுதிகளுக்கு மழையைக் கொடுக்கிறது.<br>இக்காற்று மேற்கு நோக்கி வீசுவதால் பூட்டான், சிக்கிம், மேற்கு வங்காளம், நேபாளம் மற்றும் பீஹார் ஆகிய பகுதிகளில் பருவமழையைக் கொடுக்கிறது. |


customer.support@surabooks.com Ph: 7871802000
Send Your Material &Question Answer Our Email ID -kalviexpress@gmail.com